**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.72/2017 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | **அ.சா.1** |
| Name : | | செல்லக்கண்ணு |
| Father's/Husband Name: | | **சுப்பராயர்** |
| Village : | | **கொளக்காநத்தம்** |
| Taluk : | | |
| Age : | | 48 /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 04.05.2022

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது கொளக்காநத்தம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். 09.06.2014 ம் தேதி எனது கொளுந்தனர் வீட்டில் காதுகுத்து நடைபெற்றது. அதற்கு ஆஜர் எதிரி சின்னதங்கம், மஞ்சுளா வந்திருந்தார்கள். மாலை 4.30 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள். குச்சிகாரி, தேவடியா நீ யாருடி என்று திட்டி என்னை அடித்தார்கள். என் முடியை பிடித்து வெளியை தள்ள பார்த்தார்கள். நான் போக முடியாது நான் 20 வருடமாக இருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போதே மஞ்சுளா என்பவர் என்னை பிடித்துக்கொண்டு சின்னதங்கம் என்பவர் இடுப்பில் வைத்திருந்த மருந்தை வாயில் ஊற்ற வந்தார்கள். நான் தட்டிவிட்டேன். அது மேலே கொட்டி நனைந்துவிட்டது. மேற்படி அது பூச்சி மருந்து. இன்னைக்கு தட்டிவிட்டு தப்பித்து கொண்டாய் என்றைக்காது இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டினார்கள். நான் சத்தம் போட்டபிறகு எனது வீட்டுகாரர் இரண்டு வீடு தள்ளி இருந்தவர் ஓடிவந்து காப்பாற்றினார். அவரையும் அடித்துவிட்டார்கள். அதன் பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். இது பற்றி போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் சொல்ல சொல்ல புகார் எழுதிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அரசு தரப்பு சான்றாவணம் அ.த.சா.ஆ.1 ஆகும். எனது கணவர் எதிரி வேறு கல்யாணம் செய்து கொண்டதால் என்னை மறுமணம் செய்து கொண்டார். எதிரி எனது கணவரை விட்டு

சென்று 30 வருடங்கள் ஆகிறது. அந்த விரோதத்தால் எதிரி அப்படி செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**
**வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**